# கூட்டு வாழ்க்கை

Transcribed from a message spoken in March 25, 2012 in Chennai

By *R.S.Milton*

## கிறிஸ்தவ வாழ்க்கையின் பொருள்

நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் இரண்டு அம்சங்கள் உள்ளன: ஒன்று நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை, இன்னொன்று நம்முடைய கூட்டு வாழ்க்கை. *கிறிஸ்தவ வாழ்க்கை* என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், கிறிஸ்தவனாக வாழ்வது அல்லது தேவனுடைய பிள்ளையாக வாழ்வது என்றால் என்ன பொருள்? நாம் நம்முடைய இயற்கை யான வாழ்வால் வாழாமல், கிறிஸ்துவை நம்முடைய ஜீவனாகக்கொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. இது மிகவும் எளிமையான பதில். இதை இன்னும் கொஞ்சம் எளிமையாகச் சொல்வ தானால், கிறிஸ்துவை நம் ஜீவனாகக்கொண்டு வாழ்கிற வாழ்க்கைதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ஒரு புறம், நாம்தான் வாழ்கிறோம். ஆனால், இன்னொரு புறம், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார். "கிறிஸ்து வுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ் துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசு வாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலாத்தியர் 2:20). *பிழைத்திருக்கிறேன்* என்றால் வாழ்கிறேன் என்று பொருள். எனவே, இந்த வசனத்தை "ஆயினும் வாழ்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார். நான் இப்பொழுது இந்த சரீரத்தில் வாழ்வதோ என்னில் அன்புகூர்ந்து எனக் காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ் கிறேன்," என்று இன்னும் எளிமையாக மொழிபெயர்க்கலாம். இதில், *கிறிஸ்து என்னில் வாழ்கிறார்* என்பதுதான் முக்கியமான காரியம். கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன கேள்விக்குப் பதில் இந்த வசனத்தில் இருக்கிறது.

## கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் அனுபவம்

இந்த வசனம் தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்கும் பொருந்தும். இதில் எந்த வேறுபாடும் இல்லை. ஒருவன் இன்றைக்குத்தான் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்திருந்தாலும் சரி அல்லது இன்னொருவன் 60 வருடம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனாக இருந்தாலும் சரி. நாம் நம்முடைய சொந்த இயற்கையான வாழ்வால் வாழாமல், கிறிஸ்துவால் வாழ்கிறோம் என்ற இந்த உண்மை தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் பொருந்தும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ் துவை விசுவாசிக்கிற தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்கும் இரண்டு முக்கியமான அனுபவங்கள் உண்டு. ஒன்று, *ஆண்டவராகிய இயேசு தம்முடைய இரத்தத்தினாலே நம் பாவங்களையெல்லாம் கழுவியிருக்கிறார்.* இன்னொன்று, *நாம் கிறிஸ்துவோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறோம்.*

இது நம்முடைய அனுபவம். ஏனென்றால், இயேசுவை விசுவாசிப்பதற்குமுன் சில காரியங்களைப் பற்றி நமக்கு ஓர் உணர்வு இருக்காது. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தபிறகு சில காரியங்களைப் பற்றி ஓர் உணர்வு நமக்கு இருக்கும். நம்மெல்லாருக்கும் இந்த அனுபவம் உண்டு. முந்தி சில காரி யங்களைச் செய்வதைப்பற்றி ஓர் உணர்வு இருக்காது. இப்போது சில காரியங்களைச் செய்யும் போது ஓர் உணர்வு இருக்கும். முந்தி சில காரியங்களை நாம் பேசும்போது அல்லது மற்றவர்கள் பேசும்போது ஓர் உணர்வு இருக்காது. இப்போது அந்தக் காரியங்களை நாம் பேசும்போது அல்லது மற்றவர்கள் பேசும்போது ஓர் உணர்வு இருக்கும். இந்த உணர்வு நாம் கிறிஸ்துவோடு இணைக்கப் பட்டிருக்கிறோம், கிறிஸ்துவின் ஜீவனோடு இணைக்கப்பட்டிருக்கிறோம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவனில் பங்கடைந்திருக்கிறோம் அல்லது பங்குபெற்றிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சாட்சி, நிரூபணம். அந்த ஜீவனில் இப்படிப்பட்ட உணர்வுகள் உண்டு. எனவே, அந்த உணர் வுகள் நமக்குள் எழுகின்றன.

## இயற்கையான வாழ்வு

இன்னோர் அம்சமும் உண்டு. அது என்னவென்றால், பல சமயங்களில் நாம் கிறிஸ்துவால் வாழ்வ தில்லை. நம்முடைய இயற்கையான வாழ்வு நமக்குள் மிகவும் வலுவாக இருப்பதால், பல்வேறு தரு ணங்களில் நாம் கிறிஸ்துவை நம் ஜீவனாகக்கொண்டு வாழ்வதில்லை. மாறாக நம்முடைய இயற்கை யான வாழ்வைத்தான் வாழ்கிறோம். ஒரு பக்கம், இதை முரண்பாடு என்று சொல்லலாம். ஆனால், இன்னொரு பக்கம், நம் வளர்ச்சி போதாது அல்லது நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம் என்று

சொல்லலாம். இதுவும் நம்முடைய அனுபவத்தில் உண்மையா? "எப்போதும் நான் கிறிஸ்துவை ஜீவனாகக்கொண்டு வாழ்கிறேன்" என்பது நம்முடைய அனுபவமா அல்லது பல தருணங்களில் "நான் கிறிஸ்துவை ஜீவனாகக்கொண்டு வாழ்வதில்லை, மாறாக என்னுடைய இயற்கையான வாழ்வைத்தான் நான் வாழ்கிறேன்" என்பது நம்முடைய அனுபவமா? பல சமயங்களில் நாம் நம் இயற்கையான வாழ்வைத்தான் வாழ்கிறோம். இதற்காக நாம் மனந்திரும்புகிறோம். அந்த மனந்திரும்புதல் தேவனுடைய பார்வையில் மிகவும் அருமையானது. இயற்கையான வாழ்வால் வாழ்வது தேவனுக்குத் துக்கமானதுதான். ஆனால், அதைப்பற்றி ஒரு மனந்திரும்புதல் இருக்குமென்றால் அது தேவனுடைய பார்வையில் அருமையானது.

### பரிசுத்த ஆவியானவரின் நோக்கம்

ஆகவே, நாம் நம்முடைய இயற்கையான வாழ்வை அல்லது சுயத்தை மையமாகக்கொண்டு வாழாமல், கிறிஸ்துவால் வாழ வேண்டும்; இந்த நிலைக்கு நம்மை மேன்மேலும் மேன்மேலும் கொண்டுவருவதுதான் பரிசுத்த ஆவியானவரின் நோக்கம், இதுதான் அவருடைய வேலை. "இது மிகவும் சிரமமான வாழ்க்கையாக இருக்கும்போலத் தோன்றுகிறதே," என்று நாம் நினைக்கக்கூடாது. மாறாக, இது மிகவும் ஓர் அற்புதமான வாழ்க்கை.

நாம் இரண்டுவிதமாக வாழலாம். ஒன்று, நாம் நம்மை மையமாகக்கொண்டு வாழலாம் அல்லது கிறிஸ்துவை மையமாகக்கொண்டு வாழலாம். நாம் நம்மைத் தலையாகக்கொண்டு வாழலாம் அல்லது கிறிஸ்துவைத் தலையாகக்கொண்டு வாழலாம். கிறிஸ்துவை மையமாகவும், தலையாகவும் கொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. ஆனால், நம்மை மையமாகவும், தலையாகவும் கொண்டு வாழ்வது நமக்கு இயல்பாக வரும். எனவே, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையிலே பல சூழ்நிலைகளையும், பல அனுபவங்களையும் அமைக்கிறார். இதற்கு ஒரேவொரு காரணம்தான் உண்டு. நம்மை மையமாகவும், தலையாகவும்கொண்டு வாழாமல், கிறிஸ்துவை மையமாகவும் தலையாகவும்கொண்டு வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். நம்மை மையமாகவும், தலையாகவும்கொண்டு வாழ்கிற வாழ்க்கையின் முடிவு மரணம். மரணம் என்பது ஆசீர்வாதமற்ற ஒரு தன்மை, நிலைமை. கிறிஸ்துவை மையமாகவும், தலையாகவும் கொண்டு வாழ்கிற வாழ்க்கையின் முடிவு ஜீவனும், சமாதானமுமாம். "ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (ரோமர் 8:6). இன்றைக்கு இல்லாவிட்டால் என்றைக்காகவது ஒருநாள் நாம் அதைப் புரிந்துகொள்வோம். நம்மை மையமாகவும், தலையாகவும் கொண்டு வாழ்கிற வாழ்க்கை தற்காலிகமாக நமக்கு இன்பமாகத் தோன்றலாம். நீண்ட காலப் போக்கில் கிறிஸ்துவை மையமாகவும், தலையாகவும் கொண்டு வாழ்கிற வாழ்க்கை மட்டுமே நிலையான ஆசீர்வாதத்தை நமக்கும், மற்றவர்களுக்கும் கொண்டுவரும்.

நான் இதுவரை சொன்னதைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். முதலாவது, *நாம் நம்முடைய இயற்கையான வாழ்வால் வாழாமல் கிறிஸ்துவை ஜீவனாகக் கொண்டு வாழ்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.* இரண்டாவது, *நம்மைத் தலையாகக்கொண்டு வாழாமல் கிறிஸ்துவைத் தலையாகக்கொண்டு வாழ வேண்டும்.* இது ஒரே நாளில் நடந்துமுடிந்துவிடுகிற காரியம் இல்லை. இது நம் வாழ்நாள் முழுவதும் நடக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மை மெல்ல மெல்ல சரிசெய்து சரிசெய்து கிறிஸ்துவை அவருக்கு உரிய இடமாகிய தலையாகிய இடம் அல்லது முதன்மையான இடம் அல்லது மையமான இடத்திற்குக் கொண்டுவருவதற்கு நம்முடைய வாழ்க்கையிலே பல காரியங்களைச் செய்கிறார்.

### கிறிஸ்துவின் நிறைவு

ஒரு மரத்திலிருந்து 100 பழங்கள் வரலாம் என்கிற சாத்தியக்கூறு இருக்கும்போது 10 பழங்கள்தான் வந்ததென்றால் எவ்வளவு துக்கமாக இருக்கும்! இன்னும் கொஞ்சம் சரிசெய்திருந்தால் 100 பழங்களைப் பெற்றிருக்கலாம்! ஆனால், 10 பழங்கள்தான் கிடைத்ததென்றால் அந்த மரத்தை நட்டினவனுக்கு, அந்த மரத்தைப் பராமரித்தவனுக்குத் துக்கமாயிருக்கும். அதுபோல, கிறிஸ்தவ வாழ்க்கை கிறிஸ்துவை நிறைவாக வெளிப்படுகிற வாழ்க்கையாகவும் வரலாம் அல்லது கிறிஸ்துவைக் கொஞ்சம் வெளிப்படுகிற வாழ்க்கையாகவும் இருக்கலாம். நாம் எதை விரும்புகிறோம்? கிறிஸ்துவின் நிறைவு வெளிப்படுகிற வாழ்க்கையா அல்லது ஏதோ கொஞ்சம் கிறிஸ்து தெரிகிறார் என்கிற வாழ்க்கையா? கிறிஸ்துவின் நிறைவைத்தான் நாம் விரும்புகிறோம்.

கிறிஸ்துவின் நிறைவு என்றால் என்னவென்று நான் சொல்லுகிறேன். நம் வாழ்க்கையில் ஒரு சந்தோஷமான நிகழ்ச்சி நம் வாழ்க்கையில் நடக்கும்போது, ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கும்போது, ஒரு சொத்து வாங்கும்போது, நல்ல வேலை கிடைக்கும்போது பரவசப்படுகிறோம். இதெல்

லாம் நம் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான காரியங்கள். கிறிஸ்துவின் நிறைவு நம்மூலம் வெளியாவதுதான் எல்லாவற்றையும்விட மிகவும் பரவசமானது. கிறிஸ்துவின் நிறைவு நம்மூலம் வெளிப்படும்போது அங்கு இருக்கும் மரணச்சூழ்நிலை ஜீவனாக மாறுகிறது. ஒருவன் ஒரு மரணச் சூழ்நிலையில் இருக்கிறான்; ஒரு குடும்பம் ஒரு மரணச் சூழ்நிலையில் இருக்கிறது; நாம் இருக்கும் இடத்தில் ஒரு மரணச் சூழ்நிலை இருக்கிறது. கிறிஸ்துவின் நிறைவு அல்லது பரிபூரணம் இருக்கிற ஒரு மனிதன் அங்கு சென்றால், அந்த மரணச் சூழ்நிலை ஜீவனுக்கேதுவான சூழ்நிலையாக மாறிவிடும்.

மரணச் சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து வந்தால் அந்தச் சூழ்நிலை ஜீவ சூழ்நிலையாக மாறிவிடும். யோவான் எழுதின சுவிசேஷம் முழுவதும் அதைத்தான் சொல்லுகிறது. கானாவூர் கல்யாணத்தில், சுவையுள்ள பகுதி முடிந்து சுவையற்ற பச்சைத்தண்ணீரான பகுதிக்குள் இயேசு கிறிஸ்து வருகிறார். அது சுவையுள்ள சூழ்நிலையாக மாறுகிறது. ஜீவனில்லாத வெறும் போதனைகள் மட்டுமே நிறைந்த ஒரு மனிதனுக்கு (நிக்கொதேமு) இயேசு கிறிஸ்து வருகிறார். அது ஜீவ சூழ்நிலையாக மாறுகிறது. வாழ்க்கையில் வெறுமையான ஒரு சூழ்நிலையில் இருக்கிற ஒரு பெண்ணிடம் (சமாரியப் பெண்) இயேசு கிறிஸ்து வருகிறார். அவளுடைய சூழ்நிலை நிறைவான சூழ்நிலையாக மாறுகிறது. குருடான ஒரு மனிதனிடம் இயேசு கிறிஸ்து வருகிறார். அது அவனுக்குப் பார்வையாக மாறிவிடுகிறது. பசியான சூழ்நிலைக்கு (5000 பேரைப் போஷித்தல்) இயேசு கிறிஸ்து வருகிறார். அங்கு அது நிறைவான சூழ்நிலையாக மாறுகிறது. செத்துப்போன (லாசரு) ஒரு சூழ்நிலைக்கு இயேசு கிறிஸ்து வருகிறார். அந்தச் சூழ்நிலை ஜீவனாக மாறுகிறது. எனவே, கிறிஸ்துவின் நிறைவு, பரிபூரணம், ஒரு மனிதனிடம் இருக்கும்போது எந்தச் சூழ்நிலைக்குள் அவன் வருகிறானோ அந்தச் சூழ்நிலை ஜீவ சூழ்நிலையாக மாறிவிடும். இது நம் வாஞ்சையும், ஏக்கமுமாக இருக்க வேண்டும்.

நாம் சாட்சி என்று சொல்லுகிறோம் இல்லையா? அதற்கு என்ன பொருள்? நாம் நம் வார்த்தையினால் கொடுப்பதும் சாட்சிதான். ஆனால், மிக முக்கியமாக "இந்த மனிதன் இந்தச் சூழ்நிலையில் வந்தால் ஜீவன் வரும். இவன் ஜெபித்தால் அங்கு ஜீவன் இருக்கும். இவன் ஒரு நிமிடம் சில வாக்கியங்களைப் பேசினால் அங்கு ஜீவன் இருக்கும். எதுவும் செய்யாமல் அந்த மனிதன் அங்கு இருந்தாலே போதும், அங்கு ஜீவன் வரும்," என்பது நம் சாட்சி.

கிறிஸ்து எங்கு நிறைவானவராக, பரிபூரணமானவராக இருப்பார்? எங்கு அவருக்குத் தலையாகிய இடம் கொடுக்கப்படுகிறதோ, அங்கு அவர் நிறைவானவராக, பரிபூரணமானவராக இருப்பார். தண்ணீர் மேட்டிலிருந்துதான் பாய முடியும். அதுபோல, கிறிஸ்துவுக்கு முதன்மையான, மையமான, தலைமையான இடம் கொடுக்கப்படும்போது கிறிஸ்து நிறைவானவராக, பரிபூரணமானவராக, மாற முடியும். தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும் சரி, கூட்டு வாழ்க்கையாக இருந்தாலும் சரி கிறிஸ்து மையமாகவும், தலையாகவும், முதன்மையாகவும் இருக்க வேண்டும்.

கிறிஸ்து அவருக்குரிய தலை என்கிற இடத்திற்கு வருவதற்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தால் மட்டும் போதாது, அது கூட்டு வாழ்க்கையாகவும் இருக்க வேண்டும்.

### கூட்டு வாழ்க்கை

தேவனுடைய மக்களோடு உறவுகொண்டு, தொடர்புகொண்டு, வாழ்கிற வாழ்க்கைதான் கூட்டு வாழ்க்கை. நாம் இதை சபை வாழ்க்கை என்றும் சொல்லுகிறோம். தனிப்பட்ட வாழ்க்கை என்றால் என்ன, கூட்டு வாழ்க்கை என்றால் என்னவென்று நமக்கு சில எண்ணங்கள் உண்டு. நம்மெல்லாருக்கும் தனிப்பட்ட வாழ்க்கை, கூட்டு வாழ்க்கையைப்பற்றி ஓரளவுக்குத் தெரியும். ஆனால், இதைப்பற்றி நமக்குத் தெரியாததும் நிறைய உண்டு. கூட்டு வாழ்க்கை, சபை வாழ்க்கை, என்றால் நடைமுறையில் என்ன பொருள், இதை வாழ்கிற வழிமுறை என்ன என்று கற்றுக்கொள்கிற ஒரு வழிமுறையில் நாம் இருக்கிறோம்.

கூட்டு வாழ்க்கையைப் பொறுத்தவரை நாமெல்லாரும் ஒரு 'L' போர்டு போட்டுக்கொள்ளலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் நாம் கூடிவருகிறோம். மற்ற நாட்களில் ஒருவரையொருவர் நாம் விசாரிக்கிறோம். ஒருவருக்காக ஒருவர் நாம் ஜெபிக்கிறோம். ஒருவருடைய குறைச்சலிலோ அல்லது தேவையிலோ நாம் உதவிசெய்ய முயற்சிசெய்கிறோம். இவைகளெல்லாம் கூட்டு வாழ்க்கைக்காக, சபை வாழ்க்கைக்காக, நம்மிடம் இருதயம் இருக்கிறது என்று காண்பிக்கிறது. இதன் பொருள், கூட்டு வாழ்க்கை, சபை வாழ்க்கை எப்படி வாழ்வது என்று நாம் கற்றுவிட்டோம் என்பதல்ல. இதைக் குறித்து நான் வருத்தப்படவில்லை. கூட்டு வாழ்க்கை வாழ நம்மிடம் ஒரு இருயதம் இருக்கிறது. எனவே, பரிசுத்த ஆவியானவர் அனுபவத்தில் நமக்குப் போதிப்பார். "கூட்டு வாழ்க்கை, சபை

வாழ்க்கை, என்றால் என்னவென்று எனக்குத் தெரியும்," என்று நாம் நினைத்தால் பரிசுத்த ஆவியானவருடைய போதனையை நாம் இழந்துவிடுவோம். எனவே, கூட்டு வாழ்க்கையின் குணம் என்ன? கிறிஸ்து நம்முடைய வாழ்க்கையிலே அவருக்கு உரிய இடமாகிய, அவர் வகிக்க வேண்டிய இடமாகிய, தலை என்கிற இடத்தைப் பெற வேண்டும். இதுதான் கூட்டு வாழ்க்கையின் நோக்கம்.

## தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசமும், அறிவும்

என்ன அடிப்படையில் சொல்லுகிறேன்? *"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:15). "கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ளுங்கள்" (கொலோசெயர் 2:18).* நம்முடைய வாழ்க்கையின் பல காரியங்களில் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், கிறிஸ்து தலையாக இருக்கவில்லை. அதைக்குறித்து தேவன் நம்பிக்கை இழந்துவிடவில்லை; அவர் நம்பிக்கை உள்ளவராக இருக்கிறார். தலையாகிய கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலும் வளரும்படிக்கு அவர் அப்படிச் செய்திருக்கிறார். அதற்குமுன் உள்ள வசனங்களைப் பாருங்கள். *"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராகும்வரைக்கும்..." (எபேசியர் 4:11).*

இன்றைக்குப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார். இதன் பொருள் என்ன? அவர் எதுவரைக் கட்டிக்கொண்டிருக்கிறார்? *தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசம் நம்மில் ஒரே விசுவாசமாக மாறும்வரைக்கும், தேவனுடைய குமாரனைப்பற்றும் அறிவு ஒரே அறிவாக நம்மில் மாறும்வரைக்கும் அவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.* கிறிஸ்துவின் நிறைவு என்று ஒன்று உண்டு. கிறிஸ்துவின் நிறைவுக்கு ஏற்ற வளர்த்தி என்று ஒன்று உண்டு. கிறிஸ்துவின் நிறைவுக்குத்தக்க ஒரு வளர்த்தியின் அளவை நாம் எட்டும்வரைக்கும் பரிசுத்த ஆவியானவர் இந்தக் கூட்டு வாழ்க்கையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்.

கிறிஸ்துவை நமக்குத் தெரியுமா? தெரியும். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவைப்பற்றிய அறிவு நமக்கு இருக்கிறது. ஆனால், நம்முடைய அறிவு பல படிகளில் இருக்கிறது. ஒரு சகோதரன் ஒரு படிவரைக்கும் அறிந்திருப்பார். இன்னொருவர் இன்னொரு படிவரைக்கும் அறிந்திருப்பார். நாம் அறிந்திருக்கிறபடி நாம் கிறிஸ்துவை விசுவாசிப்போம். ஒருவர் வருடத்தின் முடிவில் தன்னுடைய வருமானம் எல்லாவற்றையும் தேவனுக்கென்று கொடுத்துவிட்டு, புது வருடம் ஆரம்பிக்கும்போது தேவனை முழுமையாகச் சார்ந்து ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்தால் அது அவருடைய விசுவாசம். என்னுடைய விசுவாசம் வேறுமாதிரி இருக்கும். எனவே, தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசம் நபருக்கு நபர் மாறுபடுகிறது. ஆனால், ஒருநாள் தேவனுடைய குமாரனைப்பற்றும் நம் விசுவாசம் ஒரேமாதிரி இருக்கும். இன்றைக்கு அது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நாம் கூட்டு வாழ்க்கை வாழும்போது தேவனுடைய குமாரனைப்பற்றும் அறிவும், விசுவாசமும் நமக்குள் வளரும். ஒருநாள் அது ஒரேமாதிரி இருக்கும் என்ற நிலையை எட்டும் வரைக்கும் அது வளர்ந்துகொண்டிருக்கும். இன்றைக்கு அது ஒரேமாதிரி இல்லை. தேவனுடைய மக்கள் தேவனுடைய குமாரனை அறிந்திருக்கிற அறிவு ஒரேமாதிரி இல்லை; தேவனுடைய குமாரனை விசுவாசிக்கிற விசுவாசம் ஒரேமாதிரி இல்லை. அறிவு என்பது சத்தியத்தைப்பற்றிய அறிவு என்று சொல்லலாம். விசுவாசம் என்பது சத்தியத்தைப்பற்றிய அனுபவம் என்று சொல்லலாம். (விசுவாசம் என்று சொல்லும்போது நான் விசுவாசப்பிரமாணத்தை நான் சொல்லவில்லை.) நம்முடைய அறிவும் ஒரே மாதிரி இல்லை. நம்முடைய அனுபவமும் ஒரே மாதிரி இல்லை. எனவே, தேவனுடைய பிள்ளைகளுக்கிடையே பல சமயங்களில் இந்த வேறுபாடு இருப்பதால் அது முரண்பாடுகளையும், சச்சரவுகளையும ஏற்படுத்துகிறது. ஆனால், அது அப்படி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இது இயல்பான ஒரு வளர்ச்சி. இயல்பாகப் பிள்ளைகள் வளர்ந்துகொண்டிருக்கும்போது அவர்களுடைய அறிவிலும் அனுபவத்திலும் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

## கிறிஸ்துவின் நிறைவு

*"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போம் என்று வெளிப்படவில்லை. ஆகிலும், அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2).* ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையிலே எந்த அளவுக்கு நாம் வளர்ச்சி பெற்றிருப்போம் என்றால், எந்த அளவுக்கு நாம் ஒருமைப்பட்டிருப்போம் என்றால், அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் இருப்

போம். இந்த இலக்கை நோக்கிப் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். இது நடைபெறும்போது கிறிஸ்துவின் நிறைவான வளர்த்தி நமக்குள் காணப்படும். "இந்த மனிதன் மரணம் கவ்வியிருக்கிற ஒரு சூழ்நிலைக்குள் வரும்போது ஜீவன் சுரக்க வேண்டும் அல்லது ஜீவன் உண்டாக வேண்டும்," என்கிற அளவுக்கு வளர்த்தி இருக்க வேண்டும். இந்த நிலையை நாம் அனைவரும் எட்ட வேண்டும். இன்றைக்கு நமக்குள் ஜீவன் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்குள் நாம் ஜீவனைக் கொண்டுபோக முடியும் என்று நான் விசுவாசிக்கிறேன்.

கூட்டு வாழ்க்கை இல்லாதபோது இந்த வழிமுறை நடைபெறாது. கூட்டு வாழ்க்கை அல்லது சபை வாழ்க்கை இல்லாவிட்டால் தேவனுடைய குமாரனைப்பற்றிய அறிவு ஒருமையை நோக்கி வளராது. தேவனுடைய குமாரனைப்பற்றிய நம் அனுபவமும் ஒருமையைநோக்கி வளராது. நமக்குள் கிறிஸ்துவினுடைய வளர்த்தியின் நிறைவும் மிகவும் குறைவாகக் காணப்படும்.

எனவே, நாம் ஏன் கூட்டு வாழ்க்கை வாழ வேண்டும்? தேவனுடைய திட்டம் தனிப்பட்ட நபரல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையே என்று சொன்னால் அது உபதேசம்போல் தோன்றும். தேவனுடைய குறிக்கோள் என்ன? அவருடைய குமாரனுக்கு ஒரு சரீரம் வேண்டும் என்பது தேவனுடைய குறிக்கோள். ஆனால், நடைமுறையிலும் அனுபவத்திலும் இதன் பொருள் என்ன? தேவனுடைய குமாரனுக்கு ஒரு சரீரம் வேண்டும் என்பதின் நடைமுறைக்குரிய பொருள் என்ன? கிறிஸ்துவுக்கு ஒரு சரீரம் வேண்டும். இதுதான் தேவனுடைய நோக்கம். சரி, என்னுடைய அனுபவத்தில், என்னுடைய நடைமுறை வாழ்க்கையில், இதன் முக்கியத்துவம் என்ன? பதில் சொல்வது மிகவும் கடினம். கிறிஸ்துவைத் தலையாகக்கொண்டு வாழ்கிற வாழ்க்கைதான் கூட்டு வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் தேவன் ஓர் ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார்.

இரண்டாவது, அதன் ஆசீர்வாதம் என்னவென்றால், தேவனுடைய குமாரனைப்பற்றிய அறிவு ஒருமையை நோக்கி வளரும்; தேவனுடைய குமாரனைப்பற்றிய அனுபவம் ஒருமையை நோக்கி வளரும். கிறிஸ்துவினுடைய வளர்த்தியினுடைய நிறைவு நமக்குள் பெருகும். இந்த ஆசீர்வாதம் அங்கிருக்கிறது. கூட்டு வாழ்க்கை இல்லையென்றால் இது நடைபெற முடியாது. நடைபெறமுடியாது என்றால், 100 பழம் பழுக்க வேண்டிய மரத்தில் 10 பழம் கிடைப்பதுபோல இருக்கும். அது, தேவன் நிறைவு என்று ஒன்று வைத்திருக்கும்போது நாம் ஒரு சிறு பகுதியை மட்டும் பெற்றுக் கொள்வதைப்போல் மாறிவிடும்.

மூன்றாவது, இப்படி ஒரு கூட்டு வாழ்க்கை இருக்கும்போதுதான் நாம் கிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒத்த சாயலாக மாற்றப்படுகிறோம். "அவருடைய குமாரனுடைய சாயலுக்கு நாம் ஒத்த சாயலாக்கப்பட வேண்டும்" என்று நான் சொன்னவுடனேயே "இதெல்லாம் எனக்குத் தெரியுமே," என்று நாம் சொல்லுவோம். இதன் பொருள் என்னவென்றால், நம்முடைய உந்துததல், நம்முடைய ஆவல்கள், நம்முடைய மனப்பாங்குள், நம்முடைய குணம், நம்முடைய கட்டமைப்பு ஆகிய எல்லாமுமே கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலாக மாறுகிறது என்று பொருள்.

எனவே, "கூட்டு வாழ்க்கை என்றால் என்னவென்று நான் கற்றுக்கொண்டுவிட்டேன்," என்று என்னால் நம்பமுடியவில்லை. இன்றைக்குவரை நான் என்ன நினைக்கிறேன் என்றால், "ஆண்டவரே, எப்படிக் கூடிவாழ்வது என்று எனக்குப் போதியும்," என்பது என்னுடைய ஒரு ஜெபம். இது ஆபத்து நிறைந்தது. ஏனென்றால், கூட்டு வாழ்க்கை என்ற பெயரில் தேவனுடைய மக்கள் சிலர் தேவனுடைய மக்கள் பலரை அடிமைப்படுத்த வாய்ப்பிருக்கிறது. கூட்டு வாழ்க்கை என்ற பெயரில், ஒருமை என்ற பெயரில், தேவனுடைய மக்கள் சிலர் தேவனுடைய மக்கள் பலரை அடிமைப்படுத்த முடியும். இது சாத்தியமே. இவைகள் நமக்குத் தெரியாத காரியங்கள் இல்லை. இன்னொரு அற்றத்திலே இப்படி அடிமைப்படுத்துகிற ஒரு வாய்ப்பு இருப்பதால் யாரோடும் அதிகமாகக் கூடி வாழாமல் எந்த அளவுக்கு நாம் ஒரு தனிப்பட்ட வாழ்க்கை வாழ முடியுமோ அந்த அளவுக்கு ஒரு தனிப்பட்ட வாழ்க்கை வாழ்வது நல்லது என்கிற அந்த அற்றத்திற்குப் போக முடியும். அதனால் நாம் கூட்டு வாழ்க்கையின் எல்லா ஆசீர்வாதங்களையும் இழக்க நேரிடும்.

திருமண வாழ்க்கையில் பிரச்சினைகள் உள்ளன. பல விவாகரத்துக்கள் இந்த உலகத்தில் நடைபெறுகின்றன. அதனால் கல்யாணமே பண்ணாமல் இருப்பதுதான் இதற்குத் தீர்வா? இது சரியான சிந்தனை அல்ல. இது தேவன் இந்த மனுக்குலத்திற்கு வைத்திருக்கிற ஆசீர்வாதம். எப்படி இந்த ஆபத்துக்கள் இல்லாமல் வாழ்வது என்பதுதான் ஞானம். இது நமக்குப் புரிகிறது.

அதுபோல, தேவனிடத்தில் நாம் ஜெபிக்க வேண்டிய ஒரு ஜெபம், "பிதாவே, தேவனுடைய மக்களோடு எப்படிக் கூடி வாழ வேண்டும்; கூடி வாழ்கிற வாழ்க்கை எப்படி வாழ்வது என்று போதியும்.

என்னை ஆசீர்வதிப்பதற்கும், நான் ஆசீர்வாதமாக இருப்பதற்கும் அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வது எப்படி என்று கற்றுத் தாரும்," என்று ஜெபிக்க வேண்டும். நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுவாகக் கூட்டு வாழ்க்கையில் பகிர்ந்துகொள்ளுதல் இருக்கும். இன்னும் சொல்லப்போனால் கூட்டு வாழ்க்கையைப் *பகிர்ந்துகொள்ளுதல்* என்ற ஒரே வார்த்தையில் சுருக்கமாகச் சொல்லி விடலாம். சில சமயங்களில் பகிர்ந்துகொள்ளுதல் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கும். சிலர் அதிகமாகப் பகிர்ந்துகொள்ளலாம், சிலர் குறைவாகப் பகிர்ந்துகொள்ளலாம். பகிர்ந்துகொள்வது எப் படி என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படி என்னுடையதை நான் பகிர்ந்துகொள்வது, எப்படி நான் மற்றவர்களுடையதைப் பகிர்ந்துகொள்வது என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

2 கொரிந்தியர் 8ஆம் அதிகாரத்தில் *சமநிலைப்பிரமாணம்* என்கிற ஒரு வார்த்தை உண்டு. பவுல் சொல்லுகிறார். இப்போது எருசலேமிலுள்ள பரிசுத்தவான்கள் வறுமையில் இருக்கிறார்கள். உங்க ளிடத்தில் பணம் இருக்கிறது. எனவே, நீங்கள் அவர்களுடைய குறைச்சலிலே உதவுங்கள். ஆனால், உங்களுக்கு மிகவும் நெருக்கமாகவும், அவர்களுக்கு மிகவும் தாராளமாக மாறி நீங்கள் குறைவுபட வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. சமநிலைப்பிரமாணம் உண்டாயிருக்கும்படி நான் இதைச் சொல்லுகிறேன். அவர்களுக்குக் குறைவுபடுகிறது. உங்களிடம் நிறைவு இருக்கிறது. எனவே, கொடுங்கள்," என்று சொல்லுகிறார். பகிர்ந்துகொள்ளுதலில் சமநிலைப்பிரமாணம் என்று உண்டு. எனவே இரு அற்றங்களுக்கும் நாம் போய்விடக்கூடாது. சமநிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். நான் எவ்வளவு பகிர்ந்துகொள்ள வேண்டும். பகிர்ந்துகொள்வதற்கு நான் என் சகோதரனை எவ்வளவு ஊக்குவிக்க வேண்டும். இவையெல்லாவற்றுக்கும் சமநிலைப்பிரமாணம் வேண்டும்.

எனவே, அருமையான சகோதர சகோதரிகளே, கூட்டு வாழ்க்கை என்பது நமக்கு இருக்கும் option அல்ல. கூட்டு வாழ்க்கை என்பது கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு வாழ்கிற வாழ்க்கை. இது தான் கிறிஸ்தவ வாழ்க்கை. கிறிஸ்துவைத் தலையாகக்கொண்டு வாழ்கிற கூட்டு வாழ்க்கை இருக்கும்போதுதான் அது கிறிஸ்தவ வாழ்க்கையாக இருக்கும். இரண்டாவது, நேர்த்தியான கூட்டு வாழ்க்கை எப்படி வாழ்வது என்று நாம் கற்றுக்கொள்ளவில்லையென்றால் நாம் பல ஆசீர்வாதங் களை இழக்க நேரிடலாம். மூன்றாவது, நாம் இதை இப்போது கற்றுக்கொண்டேயிருக்கிறோம். *சமநிலைப்பிரமாணத்தை* நாம் கற்றுக்கொண்டோம் என்று என்னால் சொல்லமுடியாது. ஆனால், இந்த கூட்டு வாழ்க்கை வாழ வேண்டும், கிறிஸ்துவினுடைய நிறைவு நம்மிடம் வேண்டும் என்கிற வாஞ்சை நமக்கிருக்கிறது. நம் இருதயம் அதற்காக ஏங்குகிறது. இந்தக் கதறுதல் நம் வாழ்க்கையில் இருக்கு மென்றால் சமநிலைப்பிரமாணமுள்ள ஒரு கூட்டு வாழ்க்கை வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துவார்.